DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.326/2018**

Deposition of :PW -8

| | | |
|---|---|---|
| Name | : மணிகண்டன் | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 8th day of April 2025.

Accused present.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது சொர்ணபுரி முனியப்பன்கோவில் தெருவில் குடியிருக்கிறேன். நான் டாக்டர் அசோசியேசினில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இறந்துபோன செல்வகுமார் எனக்கு தெரியும். எங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் பரமேஸ்வரனின் அண்ணன் தான் செல்வகுமார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பரமேஸ்வரன் வீட்டிற்கு எதிர்புறம் பானை கடை வைத்துள்ளார். கடந்த 23.12.2017 அன்று நான் பரமேஸ்வரனை அழைப்பதற்காக அவர் வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிக்கும், அவரது மனைவிக்கும் தகராறு நடந்தது. அதை செல்வகுமார் கேட்டுள்ளார்.

அப்போது எதிரி செல்வகுமாரை அடித்துள்ளார். அதன் பின் நான் , பரமேஸ்வபரன் செல்வகுமாரின் மனைவி ஆகியோர் சேர்ந்து செல்வகுமாரை எஸ்கேஎஸ் மருத்துவமனை அழைத்து சென்றோம். முதலுதவி சிகிச்சை பெற்றுகொண்டு செல்வகுமாரை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம். மறுபடியும் இரவு செல்வகுமாருக்கு தலைவலி அதிகமானதால் மீண்டும் செல்வகுமாரை

ஐஸ்வர்யம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு சி.சிடி ஸ்கேன் எடுத்தார்கள். மூளையில் ரத்தகட்டி உள்ளதாக சொன்னார்கள். அறுவை சிகிச்சை செய்யவேண்டும் அதற்கு அதிக அளவில் செலவாகும் என்று சொன்னார்கள். அதன் பின் நேராக செல்வகுமாரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். செல்வகுமாரை அவசர சிகிச்சை பிரிவில் சேர்ந்ததார்கள். செல்வகுமாரின் மனைவி துணிமணிகளை எடுத்துவர வீட்டிற்கு சென்றார். நானும், சதீஷ் , பரமேஸ்வரன் ஆகியோர் மருத்துவமனையில் இருந்தோம்.

நாங்கள் மருத்துவமனையிலிருந்து டீ கடைக்கு வந்தோம். செல்வகுமார் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு சென்றுவிட்டார். ஒரு நாள் வீட்டில் வைத்திருந்தார்கள். மறுநாள் தலைசுற்றல் வந்ததால் செல்வகுமாரை சேலம் அரசு மருத்துவ மனைக்கு ICU வில் சேர்த்திருந்தார்கள். 28 ஆம் தேதியில் அரசு மருத்துவமனைக்கு வந்து போலிசார் என்னிடமும், செல்வம் மனைவியிடமும் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான்.

செல்வகுமார் ICU வில் சுயநினைவு இன்றி இருந்தார். 31ம் தேதி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மருத்துசங்கத்தில் நான் 10 ஆண்டுகளாக உதவியாளராக பணிபுரிகிறேன். அங்கு செல்வகுமாரின் அண்ணன் பரமேஸ்வரன் உதவி மேலாளராக பணிபுரிகிறார். பரமேஸ்வரன் அலுவகம் சம்மந்தமாக எதாவது வேலை சொன்னால் நான் செய்வேன். சம்பவதினத்தன்று மதியம் பரமேஸ்வரன் சாப்பிட சென்று இருந்தார். அவரை அழைத்து வர நான் சென்றிருந்தேன். மேற்படி விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. போலிசார் என்னை அரசு மருத்துவமனையில் வைத்து மட்டும் தான் விசாரணை செய்தார்கள். அதற்கு முன்போ, பின்போ விசாரிக்கவில்லை. என்னுடன் அரசு மருத்துவமனைக்கு நான், பரமேஸ்வரன், வசந்திமேரி, சதீஷ் ஆகியோர் சென்றோம்.

நாங்கள் அரசு மருத்துவமனையில் செல்வகுமாரை விசாரித்தபோது அவர் அபாயகட்டத்தில் தான் இருந்தார். போலிசார் என்னிடமும், வசந்திவேணியிடம் மட்டும் தான் கையெழுத்து வாங்கினார்கள். வசந்தவேணியிடமும் செல்வகுமாரிடமும் விசாரித்து தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. செல்வகுமார் பேசமுடியாத நிலையில் இருந்தார். அவர்கள் இருவரிடமும் விசாரித்து கையெழுத்து வாங்கிகொண்டு அதன் பின்பு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. செல்வகுமார் பேசமுடியாத நிலையில் இருந்தார். செல்வகுமார் குடும்பத்தை எனக்கு 20 வருடமாக தெரியும். செல்வகுமாருக்கும், அவரது மனைவி வந்தவேணிக்கும் குடும்ப பிரச்சனை ஏற்பட்டு அவர் சென்னையில் இருந்தார் என்று சொன்னால் வந்தவேணி செல்வகுமாருடன் தான் இருந்தார். ஆனால் அவர்களுக்குள் கருத்துவேறுபாடு இருந்தது.

சம்பவத்திற்கு பின்னிட்டு செல்வகுமாரின் மகன் தான் செல்வகுமாரை அரசு மருத்துவமனையில் முதல் முதலில் சேர்த்தார் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், அதனால் தான் மகன் செல்வகுமாரை சிகிச்சைக்கு சேர்த்த விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. செல்வகுமார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்பு ஒரு நபரை போலிசர் பிடித்து வைத்திருந்த விவரம் எனக்கு தெரியும்என்றால் சரியல்ல. ஒரு நபரை போலிசார் பிடித்துவைத்திருந்த விவரம் எனக்கு தெரியும் என்றும், அந்த நபர் செல்வகுமார் இறக்கும்வரை காவல்நிலையத்தில் இருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது.

சம்பவ சமயத்தில் செல்வகுமாரின் மனைவி வசந்தவேணி சென்னையில் இருந்தார்என்றும், சம்பவம் தெரிந்து சேலம் வந்து 25ம் தேதி வசந்தவேணி செல்வகுமாரை அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்று சொன்னால் நாங்கள் அனைவரும் கொண்டுபோய் சேர்த்தோம். முதல்முறை நாங்கள் தான் செல்வகுமாரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுசென்றோம். இரண்டாவது முறை தான் வசந்தவேணி வந்தார். அவர் சென்னையில் இருந்தாரா என்று எனக்கு தெரியாது. எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றாலும், பரமேஸ்வரன்

கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் கையெழுத்து போடவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டுகொடுத்தேன் என்று சொன்னால் ஆமாம். அரசு மருத்துவமனையில் உள்ள காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுகொடுத்தேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் பரமேஸ்வரன் என்னை வரவழைத்து சாட்சி கையெழுத்து போடசொன்னார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- L. Kalaivani,
III Additional District Judge,
Salem.